**THE ROMAN CATHOLIC DIOCESE OF KUZHITHURAI**
**MOST REV. ALBERT ANASTHAS D.D., S.T.D.**
**Bishop of Kuzhithurai**
✆ : 04651 272077
▯ : 9442451130
Bishop's House, Post Box No. 1, Unnamalaikadai - 629179, Kanyakumari District, Tamilnadu, India.

Ref. No: C/25-2026 June 02, 2026

# உலக சுற்றுச்சூழல் தினம்

## ஜுன் 05, 2026

**அ**ன்பான அருள்பணியாளர்களே, அருள்சகோதரிகளே, இறைமக்களே!

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும் உங்களுக்கு உரித்தாகுக!

1972ஆம் ஆண்டுமுதல் அகில உலகச் சுற்றுச்சூழல் நாள் ஐக்கிய நாடுகள் அவையின் வழிகாட்டுதலில் ஜுன் 05ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. நம் மறைமாவட்டத்தில் இன்று, ஜுன் ஏழாம் நாளில் அதனைக் கொண்டாடுகிறோம். நமது சொந்த மற்றும் பொது இல்லமாகிய பூமியையும், இயற்கைச் சூழலையும், இயற்கை வளங்களையும் பேணிக் காக்கவும், நிலைத்த நீடித்த எல்லோருக்குமான வளர்ச்சியை உறுதிப்படுத்தவும் பூமி வெப்பமாதலால் ஏற்பட்டிருக்கும் காலநிலை நெருக்கடியை எதிர் கொள்ளவும், உலகளாவிய இணைந்த முயற்சிகளை மேற்கொள்ளவும் இந்நாள் அழைப்புவிடுக்கிறது. 2026ஆம் ஆண்டுக்கான மையக் கரு “இயற்கையால் ஈர்க்கப்பட்டு எதிர்காலத்துக்காக, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவோம்” என்பதாகும்.

நாம் வாழும் இக்காலத்தில் சுற்றுச்சூழல்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிற வகையில் சுற்றுச்சூழல் நாள் முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில், மனிதர்கள் இல்லாமல் இயற்கையும், சுற்றுச்சூழலும், அழகிய பூமியும் வாழமுடியும். ஆனால் இயற்கையும், சுற்றுச்சூழலும், நலமான பூமியும் இல்லாமல் மனிதர்கள் வாழ முடியாது. நிலம், நீர், காற்று, ஆகாயம், இயற்கைவளங்கள் அனைத்தும் மாசுபடாமலும், அழிக்கப்படாமலும் பாதுகாக்கப்பட்டால்தான் மனிதர்கள் மாண்போடும், உரிமையோடும், நலமோடும் வாழமுடியும். இயற்கையும் சுற்றுச்சூழலும் இன்று வாழும் மனிதர்களுக்கு மட்டுமல்ல அடுத்தடுத்து வரும் பல்வேறு தலைமுறைகளுக்கும் சொந்தமானது. கடந்த நூற்றாண்டிலிருந்து இயற்கையும், சுற்றுச்சூழலும், அதிவேகமாக மாசுபடுத்தப்படுகின்றன, சுரண்டப்பட்டு அழிக்கப்படுகின்றன. பூமியின் வெப்பம் அதிகரித்து, காலநிலை நெருக்கடி ஏற்பட்டு இயற்கைப் பேரிடர்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் பூமியும், ஏழைகளும் ஒலமிட்டு அழுகிறார்கள் என்று மேனாள் திருத்தந்தை பிரான்சிஸ் சுட்டிக்காட்டுகிறார்.

சுற்றுச்சூழல்பற்றிய நம் சிந்தனையின் வேர் திருவிவிலியத்தில் உள்ளது. திருவிவிலியம் உலகப் படைப்பிலிருந்து தொடங்குவதை நாம் அறிவோம். அழகிய பிரபஞ்சத்தையும், மனிதர்களையும் சம மாண்போடு உருவாக்கிய பிறகு “கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார், அவை மிகவும் நன்றாய் இருந்தன” (தொடக்க நூல் 1:31) என்ற இறைவார்த்தை உணர்த்துவது கடவுள் உருவாக்கிய பூமி சிறப்பானது மட்டுமல்ல பல்லுயிரினங்களும் இணைந்து வாழும் வகையில் இயற்கை விதிமுறைகளுக்கு உட்பட்டிருந்தது என்பதுமாகும். மேலும், ‘மண்ணுலகும் அதில் உள்ள அனைத்தும் அவருக்கே சொந்தம்’ என்று இணைச்சட்டம் (10:14) குறிப்பிடுகிறது. எனவே கடவுளுக்குச் சொந்தமான இந்தப் பூமியும், இயற்கை வளங்களும் எல்லோருக்கும் பொதுவானவை. தனி மனிதர்களோ, அமைப்புகளோ சொந்தம் கொண்டாடி இயற்கையைச் சுரண்டவோ, மாசுபடுத்தவோ, அழிக்கவோ கூடாது என்பது இறைவனின் வழிகாட்டுதல்.

‘மண்ணுலகை நிரப்புங்கள், அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்’ (தொடக்க நூல் 1:28) என்று இறைவன் ஆசி வழங்குகிறார். இயற்கையையும் இயற்கை வளங்களையும் தேவையான அளவுக்கு மட்டுமே நுகர்ந்து, உடன் பயணித்து, பேணிப் பாதுகாத்து அடுத்தடுத்த தலைமுறைக்கு வழங்கவே இந்த ஆசீர். ஆற்றலுக்கு உட்படுத்துவது என்பதன் பொருள் அதனைச் சூறையாடுவது அல்ல, மாறாக, அதனைப் பேணிப் பாதுகாப்பதும் ஆகும்.

மேலும், இஸ்ராயேல் மக்கள் ஏழாம் நாளை ஓய்வு நாளாகவும், ஏழாம் ஆண்டை நிலத்துக்கு ஓய்வு ஆண்டாகவும், ஐம்பதாம் ஆண்டை யூபிலி ஆண்டாகவும் கொண்டாட இறைவன் வழிகாட்டுகிறார். மனிதர்கள் தங்களுக்கு வாழ்வளிக்கும் இயற்கை வளங்களை மீட்டெடுக்கவும், இயற்கையோடும் சகமனிதர்களோடும் உறவுகளில் சமத்துவத்தைப் பேணவும், நிலைத்த வளர்ச்சிக்கு உதவவுமே இறைவன் ஒய்வு சார்ந்த சட்டங்களை வழங்கினார்.

புதிய ஏற்பாட்டுக்கு வரும்போது, புனித பவுல் “படைப்பு அனைத்தும் பயனற்ற நிலைக்கு உட்பட்டுள்ளது” (உரோ 8:20) என்றும் “படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்று தவிக்கிறது” (உரோ 8:22) என்றும் கூறி, படைப்பிற்கும் மீட்பு தேவைப்படுகிறது என்பதை அறிவுறுத்துகிறார். பூமியின் வளங்களை மீட்டெடுக்க அழைப்பு விடுகிறார்.

புனித பிரான்சிஸ் அசிசியார் யூபிலி ஆண்டைக் கொண்டாடுகிற இந்தத் தருணத்தில் சுற்றுச்சூழல்பற்றிய அவருடைய சிந்தனைகளும் நமக்குத் துணைவருகின்றன. இயேசுவின் நற்செய்தியையும், வாழ்வையும், பணியையும் அப்படியே தம் வாழ்வில் வெளிப்படுத்திய அவர் ‘புகழனைத்தும் உமதே என் ஆண்டவரே!’ என்கிற படைப்புபற்றிய பாடலில் ‘நமது வாழ்வைப் பகிரும்

நமது பொது இல்லமாகிய பூமி ஒரு சகோதரி போன்றதும், நம்மை கட்டித் தழுவக் கரங்கள் விரிக்கும் ஓர் அழகான தாய் போன்றதும் என்று குறிப்பிடுகிறார். இதன் மூலம் அனைத்து உயிர்களோடும் தோழமை உறவில் வளரவும் உடன்பிறப்புகளாகக் கொண்டு பேணிக் காக்கவும் வழிகாட்டுகிறார்.

புகழனைத்தும் உமக்கே என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க மடலில் மேனாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இன்றைய சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கு மனிதனின் சுயநலமும், பேராசையும், நுகர்வுவெறியும், மனிதநேயமற்ற தொழில் நுட்பங்களும், இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட பொருளாதாரச் செயல்பாடுகளுமே காரணம் என்பதையும் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறார். மேலும் சமூகம், அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் என்கிற தளங்களிலிருந்து ஒருங்கிணைந்த பார்வையில் சூழலியல் பிரச்சனைகளை அணுகி, தீர்வுக்கு முயல வேண்டுமென்று அறிவுறுத்துகிறார். சுற்றுச்சூழலியல் சுரண்டல், மற்றும் நுகர்வைக் குறைத்து, எளிமையைக் கடைபிடித்து வாழ்வியல் மாற்றத்திற்குத் தயாராக அழைப்பு விடுக்கிறார்.

ஆகவே கீழ்க்கண்ட சில நிலைப்பாடுகளை நமதாக்க உங்களுக்குப் பரிந்துரைக்க விழைகிறேன்.

மனிதர்கள் நாம் இயற்கை மீது ஆதிக்கம் செலுத்தி ஆள்பவர்கள் அல்ல. இயற்கையோடு இணைந்து பயணித்து, பேணிப் பாதுகாக்கும் பொறுப்பாளர்கள். சுற்றுச்சூழல் மாசுபடுதல், பல்லுயிரின் இழப்பு, இயற்கை வளங்கள் சுரண்டப்படுதல் மற்றும் அழிக்கப்படுதல், பூமி வெப்பமாதல், காலநிலை நெருக்கடி, இயற்கைப் பேரிடர்கள் அனைத்திற்கும் மனிதனின் இலாப மற்றும் நுகர்வு வெறியும், சுயநலச் சமூகச் செயல்பாடுகளும் காரணம் என்பதை ஒப்புக் கொள்ளுதல்.

ஆதிக்க மனநிலையோடு சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதும், அழிப்பதும், இயற்கை அழிக்கப்படுவதைக் கண்டும் காணாமல் இருப்பதும், இயற்கையைப் பேணிப் பாதுகாக்கத் தவறுவதும் இறைவனுக்கும், சமூகத்துக்கும் எதிரான பாவம்.

இயற்கையோடு நெருங்கிய உறவை ஏற்படுத்தி, தேவைக்கு மட்டுமே நுகர்ந்து, ஆடம்பரங்களைத் தவிர்த்து, சூழலியல் மனமாற்றம் பெற்று, இயற்கையைப் பேணிக் காக்கும் எளிய கிறிஸ்தவ வாழ்வு முறைக்குத் திரும்புவது காலத்தின் கட்டாயம். அவ்வண்ணமே பின்வரும் செயல்பாடுகளையும் பரிந்துரைக்கிறேன்.

இயற்கையை உடன்பிறப்பாக நேசித்த பிரான்சிஸ் அசிசியாரின் யூபிலி ஆண்டில் இறைவன் தந்த அழகிய பூமியையும் இயற்கை வளங்களையும் பேணிக் காக்க, ஆக்கப்பூர்வமான முயற்சிகளுக்குத் திட்டமிடுவோம். நமது ஆலயங்கள், நிறுவனங்கள், இல்லங்கள், பங்குகள், கிராமங்களைப் பசுமையாக

மாற்ற அறிவியல் பூர்வமான முயற்சிகள் மேற்கொள்வோம். நமது மறைமாவட்டச் சுற்றுச்சூழல் மையம் தொடர்ந்து வழங்கும் வழிகாட்டுதல்களுக்குச் செயல்வடிவம் கொடுப்போம். குறிப்பாக,

- பங்குகள், பணிக்குழுக்கள், கல்விநிறுவனங்களில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பயிற்சிகள், கலந்தாய்வுகள், மற்றும் களப்பணிகள் மேற்கொள்வோம்.
- நமது பங்கிலும், மறைமாவட்டத்திலும் வழிபாடுகள், திருவிழாக்கள் மற்றம் கொண்டாட்டங்களை ஆடம்பரம் தவிர்த்து எளிமையாக நற்செய்திக்குச் சான்றுபகரும் வகையில் கொண்டாடுவோம்.
- ஒலி, ஒளி, காற்று, மாசு எற்படுத்துவதை முற்றிலும் தவிர்ப்பதோடு மட்காத, மறுசுழற்சி செய்ய முடியாத நெகிழிப் பொருட்கள் பதாகைகள் அனைத்தையும் தடை செய்வோம்.
- வாய்ப்புள்ள இடங்களில் மரங்களை நடுவோம். செடி, காய்கறி, மூலிகைத் தோட்டங்களை அமைப்போம். இயற்கை உணவு மற்றும் வாழ்வு முறைகளைப் பின்பற்றுவோம்.
- நிலத்தடி நீர் பாதுகாப்புக்கும், மழைநீர் சேகரிப்புக்கும் புதுப்பிக்கதக்க ஆற்றல்களைப் பயன்படுத்தவும் வழி காண்போம். பசுமைக் குடில் வாயுக்கள் உமிழ்வைக் குறைக்க முயற்சிப்போம். எல்லோரும் நிறைவாழ்வு பெறத் தம் உடலையும் இரத்தத்தையும் கையளித்த இயேசுவின் திருஉடல் திருஇரத்தப் பெருவிழா நாளில் இயேசுவைப்போல பூமியையும், இயற்கை வளங்களையும், மானிடத்தையும் பேணிப் பாதுகாக்க நம்மை அர்ப்பணிப்போம்.

இந்த நன்முயற்சிகளில் இறைவனின் அருள் உங்களோடு தங்கி உங்களுக்கு ஆற்றல் அளிப்பதாக.

**கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,**

+ G. Albert

**மேதகு ஆயர் ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்,**
**குழித்துறை மறைமாவட்டம்.**

MOST REV. ALBERT ANASTHAS
BISHOP OF KUZHITHURAI

---

**குறிப்பு:** இச்சுற்றுமடலை குழித்துறை மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலும், கிளைப் பங்குகளிலும் ஜுன் 07, 2026 அன்று ஞாயிறு திருப்பலியில் மறையுரைக்குப் பதிலாக வாசிக்கவும்.

---